# 2018-2019

### தொடக்க விழா

ஆகஸ்டு 02 ஆம் தேதி 2018-2019ஆம் கல்வியாண்டின் மொழித்துறை சார்பில் தமிழ் மன்ற தொடக்க விழா, தன்னம்பிக்கை மன்ற தொடக்க விழா, கருத்தரங்கம் என்று முப்பெரும் விழா நடைபெற்றது. மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி நிறுவன நிர்வாகி **இலட்சியத் தென்றல் திரு. லட்சுமிகாந்தன்** சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு **“நம்பிக்கையோடு நடைபோடு”** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.




### விவேகானந்தரின் 125வது ஆண்டு விழா

செப்டம்பர் 04, 2018 அன்று **“சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவின் 125 ஆவது ஆண்டு நினைவு விழா”** நடைபெற்றது. அதனை சிறப்பிக்கும் வகையில் மாணவர்களுக்கு பல்வேறுவிதமான கலைஇலக்கியப்போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும்

விவேகானந்தர் இரதம் கல்லூரி வளாகத்தில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கண்டு தரிசிக்கும் வண்ணம் நிறுத்திவைக்கப்பட்டது விழாவின் சிறப்பம்சமாக அமைந்திருந்தது.







**யூத் லீடர்சிப் சம்மிட் கருத்தரங்கு**

**அக்டோபர்** 12, 2018 அன்று கோயமுத்தூர் ஸ்ரீ கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற **"யூத் லீடர்சிப் சம்மிட் (Youth Leadership Summit)"** என்ற கருத்தரங்கில் தன்னம்பிக்கை மன்ற மாணவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.




**நம்பிக்கைத் திறவுகோல் பயிலரங்கம்**

**20.03.2019** அன்று தன்னம்பிக்கை மன்றத்தின் சார்பாக **"நம்பிக்கைத் திறவுகோல்"** என்னும் பயிலரங்கம் நடைபெற்றது. **RJ.டைசன், E.வண்ணத்தமிழ் தமிழ் பேச்சாளர் மற்றும் A.கிருஷ்ணசாமி தடகளவீரர்** ஆகிய மூவரும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று சிறப்பித்தனர்.




